**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**முன்னிலை: திரு. இரா. இராஜசேகரன், எல்.எல்.எம்,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர், குன்னம்.**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05-ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.89/2021 இல்</u>**
**<u>இடைநிலை மனு எண்.7/2025</u>**

கரிகால்சோழன் த/பெ.வடிவேல்
வேள்விமங்களம் கிராமம்
வயலப்பாடி அஞ்சல்
குன்னம் வட்டம்
பெரம்பலூர் மாவட்டம் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1.நடராஜன் த/பெ.சின்னு
2.சிவா த/பெ.நடராஜன்
3.சரோஜா க/பெ.நடராஜன்
அனைவரும்
வேள்விமங்களம் கிராமம்
வயலப்பாடி கிராமம்
குன்னம் வட்டம்
பெரம்பலூர் மாவட்டம் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 05.02.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.சின்துரை அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் C.கணேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவானது மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆணை 7 விதி 14(A), பிரிவு 151 ஆகியவற்றின் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ள வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுவின் சுருக்கம் :</u>**

2. மனுதாரர் தனது மனுவில் தான் அசல் வழக்கில் வாதி என்றும், மேற்படி வழக்கானது இன்று மனுதாரர் தரப்பு சாட்சியை விசாரிக்க வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கில் வழக்குச் சொத்து தொடர்பான ஒரு சில வருவாய்த்துறை ஆவணங்கள் மற்றும் இதர ஆவணங்கள் தனக்கு இப்போது தான் கிடைக்கப் பெற்றதாகவும், அதனால் மேற்படி ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்த காலத்தில் தக்கல் செய்ய முடியவில்லை என்றும், இவை வழக்கிற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் தன் தரப்பில் தாக்கல் செய்ய காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆதாரங்களை ஏற்றுக் கொள்ள இத்துடன் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி காலதாமதமானது வேண்டும் என்றோ, கவனக்குறைவினாலோ ஏற்பட்டதல்ல என்றும், எனவே, மனுவை ஏற்று அனுமதித்து உத்தரவிட வேண்டி கேட்கப்பட்டுள்ளது.

**<u>1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரை சுருக்கம் :</u>**

**<u>(2, 3 எதிர்மனுதாரர்கள் இதனை அனுசரிக்கிறார்கள்)</u>**

3. எதிர்மனுதாரர்களின்ன் எதிருரையில் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மறுத்துள்ளதோடு, மனுதாரரால் தற்போது தாக்கல் செய்யப்படக்கூடிய ஆவணங்களில் வா.சா.ஆ.10, 11, 17 ஆவணங்களைத் தவிர வா.சா.ஆ.8, 9, 12, 13, 14, 15, 16 ஆகியவை வழக்கு நிலுவையில் உள்ளபோது வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்டது என்றும், அதனால் அதன் உண்மைத் தன்மையை மனுதாரர் தான் சந்தேகத்திற்கு இடம் இன்றி கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும என்றும், அதிலும் குறிப்பாக மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யக்கூடிய வா.சா.ஆ.13 ஆவணம் எவ்வித விசாரணையும் செய்யாமல் மனுதாரரால் இவ்வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றும், மேற்படி ஆவணம் உண்மையில் ஏற்பட்டிருந்தால் அதன் நகலை இந்த எதிர்மனுதாரர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கக் கூடும் என்றும், அவ்வாறு விசாரணை எதுவும் செய்யாமல்

வா.சா.ஆ.13 ஆவணம் ஏற்பட்டதால் தான் அதன் நகல் மனுதாரருக்கு மட்டும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதில் உண்மைத் தன்மை இல்லை என்றும் எனவே, மேற்படி ஆவணத்தை வழங்கிய அதிகாரியை கொண்டு குறியீடு செய்யவும் வேண்டப்படுகிறது. எனவே, மனுதாரரின் இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி கேட்கப்பட்டுள்ளது.

**<u>தீர்வுக்குரிய பிரச்சனை :</u>**

4. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? தள்ளுபடியாகத்தக்கதா?

**<u>தீர்வு :</u>**

5. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, மனு, எதிருரை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

6. மனுதாரர் தரப்பில் எழுத்துமூலமான வாதுரையில் வழக்கு தாக்கல் செய்தபோது விடுபட்டுப் போன ஆவணங்களைத் தற்போது தாக்கல் செய்வதாகவும், எதிருரையில் ஆட்சேபிக்கப்பட்ட நிலையில், மேற்படி ஆவணங்கள் உண்மை நகல், சான்றிடப்பட்ட நகல்கள் என்றும், ஆவணங்களை தாக்கல் செய்வதை ஏற்றுக் கொள்வதில் எதிர்மனுதாரருக்கு ஆட்சேபிக்க உரிமையில்லை என்றும், குறுக்கு விசாரணையின் போது எதிர்மனுதாரருக்கு ஆட்சேபிக்க வாய்ப்பு உள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் உண்மையானவை என்றும், அவற்றை தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்தரவிட வேண்டி வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணங்களில் வா.சா.ஆ.8, 9, 12, 13, 14, 15, 16 ஆகியவைகள் வழக்கு நிலுவையில் உள்ளபோது வழக்கிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்றும், அதன் உண்மைத் தன்மையை மனுதாரர் தரப்பில் நிரூபிக்க வேண்டும் என்றும், எனவே, மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி கேட்கப்பட்டுள்ளது.

7. மனுதாரர் தரப்பில் வருவாய்த்துறை ஆவணங்களும், இதர ஆவணங்களும், வழக்கு தாக்கல் செய்த காலத்திலேயே தாக்கல் செய்யாமல் தற்போது காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆவணங்களை

பரிசீலிக்கையில் தெரிய வருகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி ஆவணங்களை ஏற்றுக் கொள்வதைப் பொருத்து ஆட்சேபிக்கப்பட்டுள்ளது. அது குறித்துப் பார்க்கையில், மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு பின்பு ஏற்பட்டவையா என்பது குறித்தும், அவற்றின் உண்மைத் தன்மை குறித்தும், வழக்கிற்கான அவற்றின் தொடர்பு குறித்தும் அசல் வழக்கில் தீர்மானிக்கப்படும். மேலும் மேற்படி அசல் வழக்கில் இந்த மனுவில் தாக்கல் செய்யும் ஆவணங்களை குறியீடு செய்யும் போது எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்க இயலும் என்பதாலும், வழக்கின் உண்மைத் தன்மையை அறியும் பொருட்டும், ஆவணங்களை ஏற்றுக் கொள்வதைப் பொருத்து மட்டும் இம்மனுவை ஏற்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இருப்பினும், உரிய காலத்தில் அல்லாமல் காலதாமதமாக இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை செலவுத் தொகையின் பேரில் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. இறுதியாக, மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக ரூ.500/- ஐ வருகின்ற 12.02.2026 ஆம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகத்தக்கது என்றும் உத்தரவிடப்படுகிறது.

அழைக்க : 12.02.2026

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKARAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.02.05 16:40:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u>**

இல்லை

RAJASEKARAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.02.05 16:40:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.